
# கல்வெட்டு

வள்ளுவராண்டு 2030-31 (பிரமாதி ஆண்டு) மார்கழி-தைத் திங்கள்



இராபர்ட் புரூஸ் பூட்
(கி.பி. 1834-1912)

காலாண்டிதழ் - 53 (2000, சனவரித் திங்கள்) விலை ரு 1-50
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

உள்ளே


பக்கம்

1. வன்னிவலம்பட்டி திருமலைநாயக்கர் செப்பேடு
— முனைவர். வெ. வேதாசலம் ... 1

2. மயிலாப்பூர் விருபாக்ஷீஸ்வரர் கோயில்
— அர. வசந்தகல்யாணி ... 9

3. இந்திய தொல்பழங்காலத்தின் தந்தை
இராபர்ட் புரூஸ் பூட்
— எஸ். ஸ்ரீகுமார் ... 13

4. ஆதிகேசவப் பெருமாள் கோயில், கீழ்மின்னல்
— கோ. அர்ச்சுனன் ... 16

5. கோந்தளம்
— ச. பரணன் ... 20

6. கொல்லிப்புறை காசு - ஓர் ஆய்வு
— முனைவர் ஆ. பத்மாவதி ... 22

7. பிரம்மதேசம்
— மா. சந்திரமூர்த்தி ... 27

8. அருள்மிகு உமாமகேசுவரர் திருக்கோயில்
— அ. அப்துல்மஜீத் ... 34


குறிப்பு : 1999-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் காலாண்டிதழ்கள் 52-க்குப் பிறகு இடையில் மூன்று இதழ்கள் நிர்வாகக் காரணங்களால் வெளியிட இயலவில்லை. ஆதலால் 2000 சனவரித் திங்களில் காலாண்டிதழ் எண் 53 வெளியிடப்படுகிறது.

1

# வன்னிவலம்பட்டி திருமலைநாயக்கர் செப்பேடு

**டாக்டர் வெ. வேதாசலம்**, எம் ஏ., பிஎச்.டி.
கல்வெட்டாய்வாளர்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் அண்மையில் மதுரைநாயக்க மன்னரான திருமலைநாயக்கரின் செப்பேடு ஒன்று கண்டறியப்பட்டது.[1] இச்செப்பேடு வன்னிவலப் பட்டி என்ற ஊரில் இருக்கும் முத்தரையர் சமூகத்தினைச் சார்ந்த புலவர் சு. சங்கரனிடம் உள்ளது. வன்னிவலம்பட்டி மதுரையிலிருந்து நாற்பத்துநான்கு கிலோமீட்டர் தொலைவில் பேரையூர் வட்டத்தில் மதுரைமாவட்டத்தில் இருக்கிறது. மதுரையிலிருந்து செங்கோட்டை செல்லும் நெடுஞ்சாலையிலுள்ள தே. கல்லுப்பட்டியிலிருந்து பேரையூர் செல்லும் வழியில் இது அமைந்திருக்கிறது. இவ்வூருக்கு அருகில் வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த தேவன்குறிச்சிபலையும் ஊரும் இருக்கின்றன. செப்பேட்டில் தேவன்குறிச்சி என்பது தேவயன் குறிச்சி என்றும், வன்னிவலம்பட்டி என்பது வன்னிவலாம்பட்டி என்றும் குறிக்கப்படுகின்றன. காமயநாயக்கன் என்ற பாளையக்காரன் ஆட்சிபுரிந்த இப்பகுதியில் ஏற்கெனவே மங்கல்ரேவு, பாலக்கோம்பை, இலந்தைக்குளம் போன்ற ஊர்களில் திருமலைநாயக்கர் காலச் செப்பேடுகள் கண்டறியப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.[2]

## அமைப்பும் காலமும்

இச்செப்பேடு 22 x 15 செ.மீ. அளவில் செவ்வக வடிவிலுள்ளது. இதன் மேற்புறத்தின் நடுவில் அரைவட்ட வடிவில் நீண்டிருக்கும் முறையில் இதழ் வெட்டப்பட்டு அதில் துளையும் இடப்பட்டிருக்கிறது. செப்பேட்டின் இருபுறமுமாக ஐம்பத்தேழு வரிகள் தமிழில் எழுதப்பட்டுள்ளன. செப்பேடு 'உ ராமசெயம்' என்று தொடங்குகிறது. இதன் எழுத்தமைதி கி.பி. 17-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் காணப்படுகிறது. இப்பகுதியில் முன்பு கிடைத்த திருமலைநாயக்கர் காலத்து மங்கல்ரேவு, இலந்தைக்குளம், பாலக்கோம்பை செப்பேடுகளிலுள்ள எழுத்துக்களோடு வன்னிவலம்பட்டி

செப்பேட்டு எழுத்துக்கள் ஒத்துக் காணப்படுகின்றன. செப்பேட்டில் சக ஆண்டோ, கலியாண்டோ குறிப்பிடப்படாமல தமிழ் ஆண்டும் மாதமும் குறிக்கப்படுகின்றன. குரோதன வருடம் மாசிமாதம் இருபத்தேழாம் தேதி இது எழுதப்பட்ட ஆண்டாக குறிப்பிடப் படுகிறது திருமலைநாயக்கரின் ஆட்சிக் காலத்தில் (கி.பி 1623-1659) கி.பி.1624-1625ல் குரோதன வருடம் வருவதால் அவ்வாண்டில் இச்செப்பேடு வெளியிடப்பட்டிருக்க வேண்டும். இதனை வெளியிட்ட திருமலைநாயக்கர், இப்பட்டயத்தில் மதுராபுரித்தலத்தில் எழுந்தருளியிருந்து மீனாட்சியம்மன் சொக்கலிங்க சுவாமிகள் ஆகியோரின் அனுக்கிரகத்தினால் பாண்டிமண்டலத்திற்கு மன்னராக முடிசூடி விளங்குகின்றவர் என்று குறிப்பிடப்படுகின்றார்.

## செப்பேட்டுச் செய்திகள்

இச்செப்பேட்டை வைத்திருக்கும் முத்தரையர் சமூகத்துப் புலவர் சு. சங்கரன் அவர்களின் முன்னோர்களில் ஒருவருக்குக் காவல் மானிபம், நாட்டாண்மை மானிபம் இரண்டும் திருமலைநாயக்கரால் அளிக்கப்பட்டதையே இச்செப்பேடு கூறுகிறது. இளவரசு துடிஅளகன் முத்திரியர் மகனான அளகன் முத்திரியற்கு இவ்விரு மானிபங்களைத் திருமலைநாயக்கர் வழங்கியுள்ளார். சோழ நாட்டிலும் பாண்டிநாடடிலும் புகழ்பெற்று விளங்கியுள்ள முத்தரையர் என்ற சமூகத்தினர் ஒருவருக்கே திருமலைநாயக்கர் இச்செப்பேட்டை வழங்கியுள்ளார். இச்செப்பேட்டில் அவர்கள் முத்திரியர் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

## நோக்கம்

இவ்விரு மானியங்களை அளகன்முத்திரியற்குத் திருமலை நாயக்கர் வழங்கியமைக்கான காரணமும் இச்செப்பேட்டின் இறுதியில் கூறப்பட்டிருக்கிறது. ஒருமுறை மதுராபுரிப் பட்டணமாகிய மதுரையில் அரண்மனையில் இருக்கும் நாயக்கர் மன்னரின் அலுவலகத்தில் (கச்சேரி) காவல்காரர்கள் பணம் செலுத்துவதற்காக வந்திருந்தனர். அப்போது திருமலைநாயக்கர் அவ்வழியே நடந்து வந்து அரண்மனையின் தெற்குவாயிலில் நின்று காட்சி தந்தார். அச்சமயத்தில் வன்னிவலாம்பட்டி அளகன்முத்திரியன் ஆட்டுக்கிடா ஒன்றைக் கொண்டு வந்தான். அதன் தலையைத் தென்திசை நோக்கி இருக்கும்படி நிறுத்தினான். இராஜாவான திருமலை

நாயக்கருக்கு எவ்விதமான தடையும் தீமையும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த ஆட்டுக்கிடாயைத் தலையை முறித்துப் பலி கொடுத்தான். திருமலைநாயக்கர் வாழ்வில் எவ்விதத் தடையும் தீமையும் ஏற்படக்கூடாது என்று ஆட்டின் தலையை திருகியதன் மூலம் அவற்றைச் சுட்டெரித்தான்.

அளகன்முத்திரியரின் இச்செயலைக் கண்ட திருமலைநாயக்கர் மகிழ்ந்து அவனுக்குப் பரிசாகக் காவல்மானிபம், நாட்டாண்மை மானிபம் அளித்துப் பெருமைப்படுத்தினார். இவ்வாறு உயிர்ப்பலி கொடுத்து நாயக்கருக்கு ஏற்படும் தடைகளைச் சுட்டெரித்தபோது தான் அவர் மதுரை மன்னராக ஆட்சிப்பீடத்தில் ஏறி ஒரு சில ஆண்டுகள் கழிந்திருந்தன. இவ்வேளையில் அவர் எவ்வித தடையுமின்றி நீண்டநாள் அரசவாழ்வு நடத்தி வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் குடிமக்களும் பிறரும் இவ்வாறு உயிர்ப்பலியிட்டு தடைகழிப்பது அக்காலத்தில் ஒரு வழக்கமாக இருந்துள்ளது என்பதை அளகன்முத்தியரின் செயல் காட்டுகிறது.

திருமலைநாயக்கர் தமது நாட்டில் உள்ள பல்வேறு இடங்களுக்குப் பயணம் செய்தபோது அவரைக் கண்ணுற்றுத் தமது குறையை முறையிட்டவர்களுக்கும், அவரை ஆபத்திலிருந்து காத்தவர்களுக்கும், அவர் மனம் மகிழும்படி நடந்துகொண்ட பல்துறை வித்தகர்களுக்கும் மனமுவந்து வெகுமதியளித்துப் பதவிகளும் அளித்துள்ளதை அவர்கள் வழங்கிய பல செப்பேடுகள் காட்டுகின்றன.[3] இன்றும் மதுரையைச் சூழ்ந்த கிராமங்களில் திருமலைநாயக்கரிடத்து வெகுமதியும் பதவியும் பெற்றவர்கள் அவர் கொடுத்த பட்டயங்களைப் பொன்போல் போற்றி வைத்திருக்கின்றனர். ஒருசமயம் மதுரைக்கு அருகிலுள்ள மேலக்கால் பகுதியில் திருமலைநாயக்கர் வேட்டையாடச் சென்றபோது அவரைப் புலியிடமிருந்து காத்த ரெங்கசாமிநாயக்கன் என்பவனுக்கு ஊருக்கு நாட்டாண்மையாக விளங்கும் பதவி தந்து செப்பேடும்[4] கொடுத்துள்ளார். இதுபோன்று வன்னிவலாம்பட்டி அளகன் முத்தியர் திருமலைநாயக்கரிடத்துக் கொண்ட அரச விசுவாசத்தினைப் பாராட்டி அவன் செயலுக்கு வெகுமதியாக அருகருகே இருந்தஇரண்டு ஊர்களின் காவல்பொறுப்பு, நாட்டாண்மைப் பொறுப்பு ஆகியவற்றை வழங்கியுள்ளார். அரச ஆணையான செப்பேடும் தந்துள்ளார்.

### மானிபம்

இவ்வாணையின்படி அளகன்முத்திரியருக்குத் தேவயன்குறிச்சி (தேவன்குறிச்சி) கிராமத்திற்கு வழிவழியாகச் செய்துவரும் காவல் பொறுப்பு வழங்கப்பட்டது. இத்துடன் வன்னிவலாம்பட்டி கிராமத்து நாட்டாண்மைப் பதவியும் தரப்பட்டது. தேவயன் குறிச்சி காவல்மானிபத்திற்காக நஞ்சைநிலத்தில் மூன்றுகலம் விரையடி (விதைப்பாடு) விளையும் பூமியும் புஞ்சைநிலத்தில் ஏழுகயிறு அளவு நிலமும் கொடுக்கப்பட்டன. மேலும் இதற்காக ஊரில் இருந்த கட்டின வீட்டிற்கு ஒரு பணமும், முக்குறுணி தானியமும், பிறவீட்டிற்கு ஒரு பணமும், கட்டின கடைக்கு ஒரு பணமும் அளகன்முத்திரியருக்கு அளிக்கப்பட்டன. ஆடி, தீபாவளி போன்ற பண்டிகை நாட்களில் ஊரார் ஆட்டுக்கிடா மூன்றும் அளகன்முந்திரியருக்கு அளித்து வர வேண்டும் என்று ஆணை வழங்கப்பட்டது.

நாட்டாண்மை ஊழியத்திற்கு அளகன்முத்திரியருக்கு மானிப மாக நஞ்சைநிலத்தில் இரண்டு கலம் விளையும் பூமியும் புஞ்சை நிலத்தில் நான்கு கயிறு அளவு நிலமும் தரப்பட்டன. இவைதவிர இவ்விரு கிராமங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் மரியாதையும் தர வேண்டும் என்று திருமலைநாயக்கர் ஆணை பிறப்பித்துள்ளார்

### சாட்சிகள்

இச்செப்பேட்டு அரச ஆணைக்குச் சாட்சியாக ஒன்பது பேர்கள் விளங்கியுள்ளனர். இவர்களில் இருவர் பேரையூர்ப் பகுதியின் பாளையக்காரராக விளங்கிய காமயநாயக்கனும் இப்பகுதியின் மறக் குடித் தலைவனாக விளங்கிய சின்னமறவன் சசுவர்ணதேவனும் ஆவார்கள். எஞ்சிய சாட்சிகளாக இவ்வூர்களின் பகுதியில் கிராமப் பணியாளராக இருந்துவந்த பல சமூகத்தினைச் சார்ந்த அறுவர் திகழ்ந்துள்ளனர். பெருங்கோல் அடைக்கன், தச்சு-வீரன், நீர்மகன் பூமாலை, குடிமகன்-பூமுத்தன், மாதாரி-திருமன், நீராணி-கருப்பக் குடும்பன் என்று இவர்களது பெயர்கள் செப்பேட்டின் இறுதியில் குறிப்பிடப்படுகின்றன.

இப்பட்டயத்தினைத் தயார் செய்த மாணிக்கன்கொட்டகன் என்பவனும் இப்பட்டயத்தின் ஒன்பது சாட்சிகளில் ஒருவனாக இதில் குறிக்கப்பெறுகின்றான்.

## பல்வேறு சமூகத்தினர்

இப்பட்டயத்தில் மானிபமாக வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகளைக் குறிப்பிடும்போது பல்வேறு சமூகத்தினைச் சேர்ந்த நிலவுடைமையாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. பிராமணர், முத்தரையர், செட்டியார், நாயக்கர், ரெட்டியார், கவுண்டர் முதலிய சமூகத்தினர் இதில் வருகின்றனர்.

## முத்தரையர்

முத்தரையர் என்ற சொல்லே இச்செப்பேட்டில் 'முத்திரியர்' என்று திரிந்த வழக்காகக் குறிக்கப்படுகிறது. தற்போது வலையர் என்றும் அழைக்கப்படும் இம்முத்தரையர் இன மக்கள் இன்றும் மதுரை மாவட்டத்திலும் அதனையொட்டியுள்ள காமராசர் மாவட்டத்திலும் வாழ்ந்து வருகின்றனர்.

இச்செப்பேடு மூலம் முத்தரையர் சமூகத்தினர் மதுரை நாயக்க மன்னர்களால் பதவியளித்துப் பெருமைப்படுத்தப்பட்டனர் என்பதை அறியமுடிகிறது. மதுரை நாயக்கரிடத்துக் காவல் மானியம் பெற்றவர்கள் குறிப்பிட்ட தொகையினைப் பணமாக மதுரையிலுள்ள நாயக்கர் அலுவலகத்திற்கு வந்து செலுத்திய நடைமுறையினையும் இச்செப்பேட்டால் அறிந்துகொள்ள முடிகிறது.

## செப்பேட்டு வரிகள்

### முன்பக்கம்

1. உ ராமசெயம்
2. அதிகமான மதுறாபுரித் தலத்தில் யெ
3. ழுந்தறுளிய மீனாட்ச்சி சொக்கலிங்
4. கத் திருவுளத்தின் அனுக்கிரகத்தினாலே பா
5. ண்டி மண்டலம் பதினாறு முடிபொருத்த த
6. ளரி[5] கற்த்தறாகிய திருமலை நாயக்கறவர்
7. கள் விடையருளியது தேவயன்குரிச்
8. சிகிறாமத்துக்கு மகமகனாக காவலுக்கு நே
9. முகஞ் செய்த தாம்பூர சாதின காணிகா

10. ச்சிப் பட்டயம் யென்னவென்றால் குறோ
11. தன ௵ மாசி மீ ம் உ௰௭ உ யிந்த கிறா
12. மம் காவல் யிளவறசு துடிஅளகன் முத்
13. திரி மகன் அளகன் முத்திரி [யற்கு][6]
கிறாமம் தெ
14. ன் வடல் கிள் மேன் மால் உள்ளதுக் கெ
15. ல்லாம் கட்டின வீட்டுக்கு ௰க தவச முக்
16. குருணி விபசகாயமில்லாத வீட்டு[க்கு] ௰க
17. கட்டின கடை ஒன்று[க்கு] ௰ உ௰ஆடி தீவாளி
18. பண்டிகைக்கி உ க்கு ஆட்டு கிடாய் ௲ நஞ்சை
19. மானியம் வெங்கிஷ்ட கிட்டணய்யன் ந
20. ஞ்சை[க்கு]-க்[க்கு] கருப்பன் முத்திரி
நஞ்சை[க்கு] மே[ற்கு]
21. ற்-கொப்பூரய்யன் நஞ்சை[க்கு]தெ[ற்கு] முத்தற
22. சன் செட்டி நஞ்சை[க்கு] வட[க்கு] -
விரையடி ௲ருள[7]
23. பிஞ்சை[8] மானியம் கிறமாகத்து[க்கு] கிளற்கு -
ரெங்க
24. மனாக்கன் பீற்-கிள[ற்கு] திருவய்யன்
பிஞ்சை க்கு
25. மே[ற்கு]-குருவா ரெட்டி பீ-ற தெ[ற்கு]-கா
வெட்டி
26. அய்யன் பீ ற வட[க்கு] - எ-கயத்து நிலம் கா
27. வல்மானியம்-யென்க விசலான கிராம
28. ம் வன்னிவலாம்பட்டி[க்கு] நாட்டாமைக்கி
29. றாசா உத்தரவு ஆனது யிந்த துடிஅளகன்

**பின்பக்கம்**

30. மகன் அளகன் முத்திரிக்கி கிராமம் நஞ்சை
31. யில் தெலுகறாமன்செட்டி [நஞ்சைக்கு]
கிளற்கு ம

32. ஈற வேலுக்கவுண்டன் நஞ்சைக்கு வடக்கு அளகுரெட்டி
34. நஞ்-தெற்[கு]-விரையடி உள்-மானிபம் பிஞ்
35. சை மானிபம் கிறாமத்துக்கு தென்மேற்கு கலீ
36. யாணி செட்டி பீ[பிஞ்சைக்கு] கிளக்கு பொன்னம்பலஞ்
37. செட்டி பீற் மேற்கு ஆள்வாற்னாக்கன் பீற்
38. தெக்கு அனமேலு கவண்டன் பீற் வடக்கு அ
39. றசமறத்து பிஞ்சை-௪-கயற்று நிலம்
40. நாட்டாமைக்கி யாதொரு முதமையும் அள
41. கன்முத்திரி றாசா உத்தறவு ஷி கிறாமம் வகை
42. ரெண்டுக்கு புத்திறாள் புத்திறாள் உள்ளவரைக்கும்
43. ஆண்டு வருவானாகவும் யிதுயெதுக்கெ
44. ன்றால் மதுறாபுரி பட்டணம் கச்சேரியில்
45. காவல்க்காறன் பணஞ்செலுத்தும் போது
46. றாசா நடைமேதகையின் பேரில் வந்து தெக்கு
47. வாசலில் நிற்கும் போது தெஞ்சிறாகாக[9] கிடா
48. யை தடையை முரிச்சு அளகன்முத்திரி சுட்ட
49. படியினாலே நாட்டாமைக்கி காவலுக்கு உத்த
50. றவு யிதுக்கு சாச்சி சதுரகிரிக் காமயனாக்
51. கன் சின்னமறவன் சசுவற்னதேவன் ஒன்பது
52. கூத்தன்வகை சாட்சி பட்டயந் தயா-ர்
53. செய்தவன் மாணிக்க கொட்டகன் ஷி ஒ
54. ன்பது கூத்தன்வகைக்கி பெருகோல் அடைக்கன்,
55. தச்சுவீரன், நீர்மகன் பூமாலை-குடிமகன் பூமுத்
56. தன், மாதாரி திருமன், நீராணி கருப்பக்கு
57. டும்பன் வ

**அடிக்குறிப்புகள்**

1. இச்செப்பேட்டை இக்கட்டுரையாசிரியரும் மதுரைக் காப் பாட்சியர் திரு செ. போசு அவர்களும் கண்டறிந்தனர்.
2. திருமலைநாயக்கர் செப்பேடுகள், தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, சென்னை, 1994. பக், 1, 11
   வெ. வேதாசலம், செ. போசு, பாலக்கோம்பை காமய நாயக்கர் செப்பேடு' கல்வெட்டு காலாண்டு இதழ்-48, த.தொ.பொ. வெளியீடு.
3. 'திருமலை நாயக்கர் செப்பேடுகள்' காண்க.
4. — மேற்படி நூல் பக்கம் 6.
5. 'தளத்துக்கு' என்று படிக்கவும்.
6. 'முத்திரியற்கு' என்று படிக்கவும்.
7. 'மூன்றுகலம்' என்று படிக்கவும்.
8. இச்செப்பேட்டில் புஞ்சை, நஞ்சை என்ற சொற்கள் பீசை என்றும் ந என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.
9. 'தென் சிரசாக' என்று படிக்கவும்.

2

# மயிலாப்பூர் விருபாக்ஷீஸ்வரர் கோயில்

**அர. வசந்தகல்யாணி**
**சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர்**

மயிலாப்பூர் பஜார் சாலையில் உள்ளது விருபாக்ஷீஸ்வரர் கோயில். மயிலையிலுள்ள ஏழு சிவன் கோயில்களுள் ஒன்று. திருஞானசம்பந்தரால் உயிர் பெற்ற பூம்பாவையின் தந்தை சிவ நேசச் செட்டியாரால் முற்காலத்தில் நிர்வாகம் செய்யப்பட்டது என்று செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

## கோயிலும், அமைப்பும்

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், அந்தராளம், முக மண்டபம், நந்திபீடம், பலிபீடம், திருக்குளம், திருச்சுற்று மதில் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இக்கோயில் இறைவன் விருபாக்ஷீஸ்வரர்; இறைவி விசாலாக்ஷி அம்மன். இறைவன் கருவறை சதுர வடிவுடையது. லிங்கம் உருவிற் பெரியதாக உள்ளது. இலிங்கத்தின் அமைப்பைக் கொண்டு இது பிற்காலச் சோழர் (கி.பி. 12-ஆம் நூற்றாண்டு) காலத்தது எனக் கொள்ளலாம். கருவறையின் புறச் சுவரில் உள்ள தேவகோட்டங்கள் எளிமை யான அமைப்புடையன. தேவகோட்ட மாடங்களில் உள்ள சிற்பங்களில் தட்சிணாமூர்த்தியின் சிற்பம் மட்டும் விஜயநகரர் காலத்தயது. மேற்கு தேவகோட்டத்தில் வழக்கமாக இருக்க வேண்டிய லிங்கோத்பவருக்கு பதிலாக விநாயகரின் உருவம் பிற் காலத்தின் வைக்கப்பட்டுக் கட்டப்பட்டிருந்தாலும் இவ்விநாயகரும் விஜயநகரர் கலைப் பாணியில் அமைந்துள்ளது. விநாயகர் இங்கு வேலைப்பாடு மிக்க அதிட்டானத்தில் அமர்ந்துள்ளார். இவ்வுருவம் முன்னர் கோயிற் பரிவார தெய்வமாக இருந்து பிற்காலத் திருப் பணியில் இடம் மாற்றி வைத்துள்ளனர்.

## அர்த்த மண்டபம்

கருவறையின் முன்னே அர்த்தமண்டபம் தூண்களின்றிச் சதுர வடிவில் அமைந்துள்ளது. இதன் புறச்சுவரில் தென்திசைக் கோட்டத்தில் உள்ள நர்த்தன விநாயகரும், வடதிசைக் கோட்டததில் உள்ள துர்க்கையும் அண்மைக் காலத்தவையாக உள்ளன. அர்த்தமண்டபத்தின் முன்புறமுள்ள இடைநாழியின் பக்கச்சுவர் மூடப்பட்டுத் தனியறை போல் காணப்படுகிறது. இதன் முன் உள்ள முகமண்டபமும், பிற்காலத்தே சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுக் காணப்படுகின்றது. இம்மண்டபத்தைப் பதினாறு தூண்கள் அலங்கரிக்கின்றன. இவை பிற்கால விஜயநகரர் காலத்தவை என்பதை இவற்றின் அமைப்புமுறை கொண்டு தெளியலாம்.

## விஜயநகரர் காலச் சிற்ப வடிவங்கள்

ஒரு தூணில் விஜயநகரர் காலத்திய ஆணின் உருவமொன்று பணிவோடு வணங்கி நிற்கும் நிலையில் உள்ளது. தலைப்பாகை இடப்புறம் சரிந்துள்ள நிலையும், ஆடை அணிகலன், முகப் பொலிவும் கொண்டு இது விஜயநகரர் காலத்து அரசன் அல்லது அமைச்சன் உருவமாக இருக்குமெனலாம் அல்லது கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் பெரிய அளவில் இக்கோயிலை விரிவுபடுத்திய கொடையாளரின் உருவமாக இருக்கலாம்.

இம்மண்டபத்தில் வடமேற்குத் திசைச் சுவரில் பிந்தைய சோழர்காலச் சங்கூதும் பூதகணம் ஒன்றின் உருவம் மட்டும் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இது தவிர சண்முகர் சன்னதியின் வடபுறச் சுவரில் நடனமாடும் பெண்ணின் உருவமும், மத்தளம் வாசிப்பான் அவளின் வலப்புறமும், கைத்தாளமிடுவான் இடப் புறமும் அமைந்துள்ள சிற்பச்சிதறல் ஒன்று 12-ஆம் நூற்றாண்டின் கால அமைதியிலானது. இம் முகமண்டபத்தின் வடபக்கம் செப்புத் திருமேனிகள் வைக்கப்பட்டுள்ளன முகமண்டபத்தின் வடகிழக்குப் பகுதியை ஒட்டி அம்மன் சன்னதி உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம் என்று சிறிய அமைப்புடன் உள்ளது. கருவறையிலுள்ள அம்மன் 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அம்மன் சன்னதி முன்னுள்ள நந்தியும் இக்காலத்தது. இச்சன்னதி வாசலில் வடகிழக்கு மூலையிலுள்ள பைரவர், சூரியன் ஆகிய சிற்பங்கள் விஜயநகரர் காலத்தவை.

முகமண்டபத்தின் முன்னுள்ள நந்தியும் பலிபீடமும் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டுப் பிற்காலச் சோழர் காலத்தவை. இத்திருக் கோயிற் திருச்சுற்றின் தென்மேற்கில் அமைந்துள்ள ஆறுமுகன் சன்னதியிலுள்ள வள்ளி தெய்வயானை சமேத ஆறுமுகன் சிற்பங்கள் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

### சோழர் காலச் சுவடுகள்

இக்கோயில் திருச்சுற்று மதிலை ஒட்டித் தெற்கிலும் மேற்கிலும் இரு வாயில்கள் உள்ளன. தென்திசை வாயில் கோபுரமின்றிக் கல்காரத்துடன் காணப்படுகிறது. இதனை அலங்கரிக்கும் தூண்கள் உருளை வடிவுடையன. இவற்றின் போதிகைகள் இருதலைப் போதிகைகளாக உள்ளன. இவை பிந்தைய சோழர் காலப் பாணியைச் சார்ந்தவை. சென்னை மாநகரின் இதயமாக மயிலைப் பகுதியில் அமைந்துள்ள இக்கோயில் காலத்தால் பழமையானது. அதாவது திருஞானசம்பந்தரோடு தொடர்புடையது என்பது செவி வழிசெய்தி. இது செவி வழிச் செய்தியாயிருப்பினும் மயிலாப்பூரைச் சார்ந்து அமைந்துள்ளதுதால் வரலாற்றுச் சுவடுகள் இக்கோயிலிலும் இருந்திருத்தல் வேண்டும். அதன் பின்னர் கோயில் கருங்கற் திருப்பணியாக கி.பி. 12-13ஆம் நூற்றாண்டில் அதாவது சோழர்காலத்தில் மாற்றப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கு ஆதாரஞ்சேர்க்கும் வகையில் இக்கோயிலைச் சுற்றியுள்ள தூண்களும் கல்வெட்டுகளும் சிதறிக்கிடக்கும் சிற்பங் களும் பிந்தைய சோழர் காலத்தனவாக உள்ளன.

### திருப்பூம்பாவை நாயனார்

இன்னும் இக்கோயிலில் பல துண்டுக் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஒன்றில் 'உடையார் திருப்பூம்பாவை நாய . . . . என்று பாண்டியர் காலத்தில் எழுதப்பட்டுக் குறிக்கப்படுகிறது. ஒருவேளை கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டில் கற்றளியாக்கப்பட்ட இக்கோயில் இறைவன் திருப்பூம்பாவை நாயனார் என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ண இடமளிப்பதாக உள்ளது.

பின்னர் விஜயநகரர் காலத்தில் மற்றொரு திருப்பணி செய்யப் பட்டு அவர்தம் வழிபடு தெய்வமான விருபாக்ஷீஸ்வரர் பெயரையே இதற்கும் வைத்திருக்க வேண்டும்.

**சோழர்கால அடிச்சுவட்டில்**

ஆகப் பிந்தைய சோழர் காலத்தில் எழுப்பப்பட்ட இவ்வாலயத்தின் அடிச்சுவட்டில் விஜயநகரர் காலத்திய கோயில் எழுப்பப்பட்டு அண்மைக்காலத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே இக்கோயிலில் சோழர், பாண்டியர், விஜயநகரர் காலக் கல்வெட்டுகளையும், கலைச்செல்வங்களையும் காணமுடிகிறது.

காலவெள்ளத்தில் கலைந்து சிதறிய இக்கோயில் மீண்டும் செய்யப்பட்ட திருப்பணிகளால் ஓரளவு நல்ல முறையில் இருந்துள்ளது. தற்போது இக்கோயில் மீண்டும் புனரமைக்கப்பட்டுக் குடநீராட்டு விழாவும் நடத்தப் பெற்று மக்களின் வழிபாட்டுத் தலமாகச் சிறப்புற விளங்குகிறது. ★

## வாங்கல்

கருவூரிலிருந்து பத்துக்கல் தொலைவிலுள்ள இவ்வூரில் பழைய வாங்கலம்மன் கோயில் உள்ளது. இக்கோயில் பற்றிய இராபர்ட் கிளைவ் காலத்திய காகித ஆவணம் ஒன்று ஆசிரியர் இல. பரணன் அவர்களின் உதவியுடன் நகல் எடுக்கப்பட்டு அதன் விபரம் நம் துறை கல்வெட்டு காலாண்டிதழில் வெளி வந்துள்ளது. நாயக்கர் காலத்திய திருப்பணியுடன் கூடிய இக்கோயில் முன்மண்டபத்தின் நுழைவாயிலின் இருபுறமும் உயரமான துவாரபாலகி அம்மன் சிற்பங்கள் உள்ளது. அவற்றுள் இடது பக்கமுள்ள சிற்பத்தின் பீடத்தில் 17-18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு அரியான் மகன் சின்ன மூப்பன் அரியான் என்பவன் துவாரபாலகி அம்மன் சிற்பத்தைச் செய்துள்ளான் என்பதைத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு : அரியான் மகன் சின்ன
மூப்பன் அரியான் உபையம்

தகவல் : **இரா. ஜெயராமன்**
இளநிலைக் கல்வெட்டாய்வாளர்
தொ. பொ. ஆ. துறை, தஞ்சை

# 3

# இந்திய தொல்பழங்காலத்தின் தந்தை இராபர்ட் புரூஸ் பூட்

**எஸ். ஸ்ரீகுமார்**
தொழில் நுட்ப உதவியர்

1863-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் இந்திய தொல் பழங்கால வரலாற்றிற்கு ஒரு பொன் நாள் எனலாம். அந்நாளில் தான் நிலவியல் வல்லுநர் (Geologist) இராபர்ட் புரூஸ் பூட் முதன்முதலாகப் பழைய கற்காலக் கருவியினை (Palaeolithic Tool) சென்னையை அடுத்த பல்லாவரம் பகுதியில் கண்டெடுத்து, அதன் வாயிலாகப் பனியுகக் காலத்தில் (Pleistocene period) இந்தியாவில் மனிதன் வாழ்ந்திருந்ததற்கான தடயம் கிடைக்கப் பெறுவதை உலகிற்கு வெளிப்படுத்தினார். நிலவியல் வல்லுநராகத் திகழ்ந்த போதிலும், தொல்பழங்காலம் தொடர்பான ஆராய்ச்சிப் பணியை ஆர்வத்துடன் மேற்கொண்டு, தென்னிந்தியாவின் பல இடங்களுக்கும் போக்குவரத்து வசதியில்லாத காலத்தில் குதிரையின் மீது பயணம் செய்து அரிய தொல்பழங்காலப் பகுதிகளை கண்டறிந்தது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

இராபர்ட் புரூஸ் பூட் F.G.S. அவர்கள் 1858-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது 24ஆவது வயதில் மத்திய நிலவியல் ஆய்வுத் துறையில் (G.S.I.) நிலஅளவையாளராகப் (Surveyor) பணியில் சேர்ந்தார். அத்துறையில் 33 ஆண்டுகள் நிலவியல் ஆராய்ச்சிப் பணியை மேற்கொண்டு 1891-ஆம் ஆண்டு முதுநிலைக் கண்காணிப்பாளராக (Senior Superintendent) ஓய்வு பெற்றார். பொதுவாக, அவரது ஆய்வுப்பணி சென்னை மாகாணத்திற்குட் பட்டே நடைபெற்றதாக அறிகின்றோம். அவர் எழுதிய "தார்வார் பாறை அமைப்பு - தென் இந்தியாவின் தங்கத்தாதுத் துகள்க ளடங்கிய ஒரு முதன்மைப் பாறைத் தொடர்" (Dharwar System-the Chief Auriferous rock series of South India) என்ற

ஆய்வுக் கட்டுரை இந்திய நிலவியல் ஆய்வில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும், அவர் ஆர்கேயன் பாறைகள் பற்றியும் ஆய்வு மேற்கொண்டு, பல நிலவியல் தகவல்களையும் வெளிப் படுத்தியுள்ளார்.

பல்லாவரத்தில் கல் ஆயுதத்தைக் கண்டெடுத்ததன் பிறகு திருவள்ளூர் மாவட்டம் (செங்கல்பட்டு மாவட்டம்) பூண்டி நீர்த் தேக்கத்திற்கு அருகே அத்திரம்பாக்கம் ஓடைப்பகுதி மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் கள ஆய்வு மேற்கொண்டு பழைய கற்காலக் கல் ஆயுதங்கள் பலவற்றைச் சேகரித்துள்ளார். இப்பகுதியில் கிடைக்கப் பெறுகின்ற பழைய கற்காலக் கருவிகள் சென்னை கைகோடரி மரபு (Madras Handaxe culture) வகையைச் சார்ந்தவை என்பதனை நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

இராபர்ட் புரூஸ் பூட் தென்னிந்தியத் தீபகற்பப் பகுதியில் கண்டுபிடித்த 459 வரலாற்றுக்கு முற்பட்டகாலப் பகுதிகள் 42 பகுதிகள் பழைய கற்காலத்தையும் (Palaeolithic sites) 252 பகுதிகள் புதிய கற்காலத்தையும் (Neolithic sites) சார்ந்தவையாகும். மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தேரி பகுதிகளில் நுண்கற்காலக் கருவிகளைக் கண்டெடுத்து, அப்பகுதியில் நுண் கற்காலத் தொழிற்சாலை இருந்தமையை உறுதிப்படுத்தியுள்ளார். பழைய கற்கால, புதிய கற்காலக் கல் ஆயுதங்களை அதன் உருவமைப்பு மற்றும் தொழில் நுட்ப முறையைக் கொண்டு வகைப்படுத்தும் பணியையும் மேற்கொண்டார். தென்னிந்தியாவில் பழைய கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்குமிடையேயுள்ள நீண்ட இடைவெளியைக் கண்டறிந்து, அதற்கான காரணத்தை அறியும் பொருட்டு மேற்கொண்ட அவரது ஆய்வு சிறப்பு வாய்ந்ததாகும்.

அரிய கண்டு பிடிப்புகளை வெளிகொணர்ந்து, பல தொல்லியல் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டுள்ள இராபர்ட் புரூஸ் பூட், ''இந்தியத் தொல்பழங்காலத்தின் தந்தை'' என தொல்லியல் வல்லுநர்களால் அழைக்கப்பட்டு வருவது ஏற்புடையதாகும். அவரால் சென்னை, மைசூர், ஹைதராபாத் மற்றும் பரோடா பகுதிகளில் சேகரிக்கப் பட்ட வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொல்பொருட்கள் 1904ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகத் துறையால் வாங்கப் பெற்று,

அதற்கெனத் தனிக் காட்சி அறையும் தொல்லியல் பிரிவில் நிறுவப் பட்டது. மேலும், அவரால் சேகரிக்கப்பட்ட தொல்பொருட்களின் சேகரிப்புப் பட்டியல் (Catalogue) அவரது மரணத்திற்குப் பிறகு *1914*-ஆம் ஆண்டு சென்னை அருங்காட்சியகத் துறையினரால் இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டது. சில தொல்பொருட்கள் கல்கத்தா இந்திய அருங்காட்சியகத்தில் பார்வையாளர்களுக்காகக் காட்சிப் பெட்டியில் வைக்கப்பட்டன.

இந்திய தொல்பழங்கால ஆராய்ச்சி வளர்ச்சிக்கு அடித்தள மிட்ட இராபர்ட் புரூஸ் பூட் *1912*-ஆம் ஆண்டு டிசம்பர் *29*-ஆம் நாளில் இயற்கை எய்தினார். அவரது அடிப்படைக் களஆய்வுக் குறிப்புகள் இன்றளவும் இந்தியத் தொல்பழங்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்பட்டு வருகின்றன. இந்திய நாகரிக வரலாற்றை லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென முதன் முதலில் உலகுக்குக் காட்டிய பெருமை இவரையே சாரும்.

## நங்கவரம் வணிகர் குழு - கல்வெட்டு

கரூர் மாவட்டம் நங்கவரம் கிராமத்தில் *1000* ஆண்டுகளுக்கு முற்பட்ட வணிகர் குழுக் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கல்லின் ஒருபுறம் *4* கரங்களுடன் கூடிய துர்க்கையின் உருவமும் பின்புறம் ஸ்ரீ வத்சமும் செதுக்கப்பட்டுள்ளன. திருமகளின் இரு புறம் குத்துவிளக்குகளும் கீழே கல்வெட்டும் உள்ளன. மேலும் இருபக்கங்களிலும் சுருள்பட்டா அரிவாள், சிற்றுளி, நீண்டவாள், கேடயம் ஆகியன காட்டப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டை இத்துறைப் பதிவு அலுவலர் கி. ஸ்ரீதரன், காப்பாட்சியர் நாக. கணேசன் உதவியர் நடராஜன் ஆகியோர் கண்டறிந்து ஆய்வு செய்துள்ளனர்.

# 4 ஆதிகேசவப் பெருமாள் கோயில் கீழ்மின்னல்

கோ. அர்ச்சுனன்
கல்வெட்டாய்வாளர்

வடார்க்காடு மாவட்டம், ஆர்க்காட்டிலிருந்து வேலூர் செல்லும் பெரு வழியில் மேல் விஷாரத்தைத் தாண்டி அமைந்துள்ள சிற்றூர் கீழ் மின்னல். இவ்வூரைப் பொன்னின் பெருமாள் ஊர் என்றும், முன்னல் என்றும் வென்று மண்கொண்ட சம்புவராயரின் 17-ஆவது ஆண்டு (கி.பி. 1339) கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

ஊரின் மேற்கில் இக்கோயில் உள்ளது. கீழ்த் திசையை நோக்கி உள்ள இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், அந்தராளம், மகாமண்டபம், கருடாழ்வார் சன்னதி, பலிபீடம், கொடிமரம் ஆகியவற்றைக் கொண்ட சிறிய கோயில் இது. கோயில் கருவறை சதுர வடிவுடையது. கருவறையில் விஷ்ணு, ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். திருமாலின் மேற்கரங்கள் ஆழியும், சங்கும் ஏந்தி இருக்கிறது. கீழ்க் கரங்கள் அபய முத்திரையிலும் ஊரு முத்திரையிலும் அமைந்து அருள் பாலிக்கிறது. கிரீட மகுடம் தலையை அணி செய்கிறது. மகர குண்டலம், சரப்பளி, பூநூல், கேயூரம், கைவளை, இடை கச்சை, பாதசரம் ஆகியவை திருமாலை முடி முதல் அடி வரை அலங்கரிக்கின்றன. இவ்வுருவம் 134 செ.மீ உயரமும் 28 செ.மீ அகலமும் உடையது. திருமாலின் வலப்புறம் ஸ்ரீதேவி தாயார் இடது கையில் தாமரையைக் கொண்டு வலக் கையை லோல முத்திரையில் தொங்க விட்டு நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார். இடப்புறத்தில் ஸ்ரீதேவி வலக்கையில் தாமரை மொக்கைப் பற்றி, இடக்கையைத் தொங்கவிட்டு திரிபங்கத்தில் நிற்கிறார். இவ்விரு உருவங்களும் 102 செ.மீ உயரமும், 22 செ.மீ அகலமும் உடையவை. இவ்வுருவங்களின் சிற்ப அமைதி, உருவ அமைப்பு, முகப் பொலிவு. ஆடை அணிகலன்கள் ஆகியவற்றைக் கொண்டு

பார்க்கும்போது இதனை கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சம்புவராயர் காலத்துப் பாணியாகக் கருதலாம்.

இக்கோயில் கருவறையின் மேல் சதுரவட்டம், கோண வட்டம் காட்டப்பட்டுள்ளன. சதுர வட்டத்தின் கீழ் கெண்டை மீனின் உருவம் (50 செ.மீ நீளம் 17 செ.மீ அகலம்) பொறிக்கப் பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள உற்சவ விக்கிரகங்களான கேசவப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியார், ஆகிய செப்புத் திருமேனிகள் செப்புக் கலவை கொண்டு முழுவதும் கனமாக வார்க்கப் பட்டுள்ளன. இவை நாயக்கர் காலத்தை (கி.பி. 16-17 ஆம் நூற் றாண்டைச்) சார்ந்தவை.

இக்கோயில் கருவறை வாயில் வேலைப்பாடு இன்றி அரைத் தூண்கள் இன்றி மிக எளிமையாகக் காணப்படுகின்றது. வாயில் முகப்பில் கஜலட்சுமியின் உருவம் காட்டப்படவில்லை. கருவறை வாயிலின் இருபுறமும் தென்புறத்தில் கருடாழ்வாரும் வடபுறத்தில் ஆஞ்சநேயரும் சிற்ப வடிவங்களாக உள்ளன. சுமார் 30 செ.மீ உயரமும் 17 செ.மீ அகலமும் உடைய இவ்விரு சிற்பங் களும் சம்புவராயர் காலத்தவை. கருடாழ்வார் உருவம் கீழ்த்திசை நோக்கி அஞ்சலித்து நிற்கின்றது. ஆஞ்சநேயரின் உருவம் தென் திசையை நோக்கி கூப்பிய கரங்களோடு காட்டப்பட்டுள்ளது. கருடாழ்வாரின் தோள்களில் இறக்கை காட்டப்பட்டுள்ளது. இவ்விரு உருவங்களும் கருவறை வாயிலில் வணங்கியவாறு காத்து நிற்கின்றன.

இக்கோயில் கருவறை உட்புறமாக 250 செ.மீ பக்க அளவு உடையது. வெளிப்பக்க அளவு 430 செ.மீ ஆகும். கருவறை முன் அர்த்த மண்டபம் 300 செ.மீ நீளமும் 221 செ.மீ அகலமும் கொண்டு கிழ் மேலாக அமைந்துள்ளது. இதன் வடபுறத்திலும் தென் புறத்திலும் பெரிதும் சிறிதுமாக இரண்டு உள் மாடங்கள் உள்ளன. அர்த்தமண்டப வாயிலின் பக்கங்கள் வேலைப்பாடின்றி எளிமை யாக உள்ளது. திருநிலைக் காலின் பக்கங்கள் தாமரை இதழ் வடிவுடனும், நாக பந்த கட்டுகளுடனும் காணப்படுகின்றது.

அர்த்த மண்டபத்தின் முன்புறம் உட்பக்கம் 90 செ.மீ நீள முள்ள அந்தராளம் நீண்டுள்ளது. இதன் முன்புறம் உட்பக்கம் 700 செ.மீ. நீளமும், 500 செ.மீ அகலமும், வெளிப்பக்கம் 692 செ.மீ நீளமும் 670 செ. மீ அகலமும் கொண்ட நீள் சதுர வடிவில் மகாமண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் நடுவே 8 தூண்கள் அலங்கரிக்கின்றன. அவற்றின் வடக்கிலும், தெற்கிலும் உள்ள தூண்கள் எளிமையாக வேலைப்பாடின்றி சுவரை ஒட்டி பொருத்தப்பட்டுள்ளது. நடுவே உள்ள நான்கு தூண்கள் மட்டும் வேலைப்பாடுகளுடன் சித்திரத் தூண்களாக அலங்கரிக்கின்றன.

இத்தூண்களில் தென்மேற்கில் அமைந்துள்ள தூணில் தாயாரின் உருவமும், தென் கிழக்கே அளமந்துள்ள தூணில் முனிவரின் உருவமும், வட மேற்கே உள்ள தூணில் யோகா சனத்தில் அமர்ந்திருக்கும் மற்றொரு முனிவரின் உருவமும் அரசனின் உருவமும் காணப்படுகின்றன. இவ்வுருவம் இரண்டு கைகளையும் அஞ்சலித்தபடி கருவறையை நோக்கி வணங்கி நிற்கிறது. இதன் நெற்றியில் திருமண்ணும், கழுத்தில் அணியும், இடையில் முழங்கால் வரையில் ஆடையும் அணிந்து நிற்கிறது. கேசவப் பெருமாளை வணங்கி நிற்கும் இவ்வுருவம் இக்கோயிலை திருப்பணி செய்த வென்று மண் கொண்ட சம்புவராயரின் உருவ மாகவோ அல்லது சம்புவராயரின் வழித் தோன்றலாகவோ இருத்தல் வேண்டும். இவ்வுருவம் 54 செ. மீ உயரமும் 10 செ. மீ அகலமும் உடையது. கி.பி 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

இம்மண்டபத்தின் வடபுறத்தில் இராமானுஜர், நம்மாழ்வார் ஆகியோரின் சிற்ப உருவங்கள் உள்ளன. தென்புறத்தில் அனுமானின் நின்ற கோல சிற்ப வடிவினைக் காணலாம். இவை அண்மைக் காலத்தவை. முகமண்டபத்தின் வாயில் நான்கு படிக ளுடன் பக்க வாட்டில் யாளியின் துதிக்கை அலங்கரிக்கக் காணப் படுகிறது. முகமண்டபத்தின் முன்புறம் கருடாழ்வார் சன்னதியும், அதன் முன்புறம் பலிபீடமும், கொடி மரமும் உள்ளன. பலி பீடம் அதிட்டான வர்க்கங்களுடன் முழுமையாக அமைக்கப் பட்டுள்ளது. ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை அதன் மேல் பலி பீடம் அமைந்துள்ளது. இப்பலி பீடம் பழமை யான தோற்றம் உடையது. இது கோயிலின் தொடக்க காலத்தில் அமைக்கப்பட்ட பழைய பீடமாகும். இது ராஜநாராயண சம்புவ ராயரின் காலத்தியது.

இக்கோயில் பலி பீடத்தின் முன்புறம் இராஜநாராயண சம்புவராயரின் 17-ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு உள்ளது. இக்கல்வெட்டு பலகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு மிகவும் சேதமடைந்து எழுத்துக்கள் பொரிந்து போய் உள்ளன. கல்வெட்டின் சிலவரிகள் மட்டுமே படிக்கும் நிலையில் உள்ளன.

இக்கல்வெட்டு முதலாம் இராஜ நாராயணனின் 20-வது ஆட்சியாண்டைச் (கி.பி. 1357) சார்ந்த கல்வெட்டாகும். இக் கல்வெட்டில் நங்கைப் பிள்ளை ஐயங்கொண்ட சோழ பிரம்மாதி ராயன் என்பவர் கேசவப் பெருமாள் கோயில் கருவறை, அர்த்த மண்டபம் ஆகியவற்றின் திருப்பணிச் செலவுக்கென 120 கலம் நெல் கொடையாக வழங்கிய செய்தியைக் கூறுகிறது.

சம்புவராயர் காலத்திய இக்கோயிலில் கால வெள்ளத்தில் ஏற்பட்ட திருப்பணியால் பண்டைய கட்டடக் கலையின் சிறப் பினை காண முடியவில்லை. இருந்தபோதிலும் இக்கோயிலின் பலி பீடம் மற்றும் கொடி மரங்களைக் காணும் போது பண்டைய கோயிலும் தற்போது எஞ்சியுள்ள பலி பீடத்தின் அடித்தளம் என்னும் அதிட்டான வர்க்கத்தை ஒத்து அமைந்திருக்க வேண்டும் என அறிய முடிகிறது. பலி பீடத்தின் முன்புறம் உள்ள கொடி மரம் அதன் முன்புறம் உள்ள கருடாழ்வார் உருவம் யாவும் சம்புவராயர் காலத்தியது.

கொடி மரத்தின் பின்புறத்தில் 65 செ. மீ உயரமும், 11 செ.மீ அகலமும் கொண்டு அஞ்சலித்து நிற்கும் ஆஞ்சநேயர் வாலைத் தலை மேல் தூக்கிய வண்ணம் காட்டப்பட்டுள்ளார். முகம் தென் திசை நோக்கி அமைந்துள்ளது. காதில் குண்டலமும் தலையில் கொண்டையும், இடையில் கச்சையும் அலங்கரிக்கின்றன. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவ்வுருவம் சம்புவராயர் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கருடாழ்வாரின் உருவம் கூப்பிய கரங்களோடு காணப்படுகிறது. கிரீட மகுடம், வட்டக் குழைகள், இடைக்கச்சை யாவும் கருடனை அலங்கரிக்கின்றன. இக்கோயில் நாயக்கர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டுள்ளது.

# 5 கோந்தளம்

**ச. பரணன்**
காப்பாட்சியர்

மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் ஆட்சிபுரிந்த காலத்தில் தம் குல தர்மபூசைகள், நவராத்திரி பூசை மற்றும் பவானியம்மன் பூசைகளை மக்கள் அனைவரும் அறியும் பொருட்டு அரண்மனையில் பறையொலி எழுப்பி அறிவிப்புச் செய்ததைக் 'கோந்தளம்' என்று குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு பறை அடிப்பவர்கள் (கோந்தளம் நிகழ்த்துபவர்கள்) கோந்தளர்கள் என்று அழைக்கப்பட்டனர். இக்கோந்தளர்கள் தெளிவின்றிக் கொச்சையாக மராத்தி மொழி பேசுபவர்கள் ஆவர். இவ்வகைக் கோந்தள நிகழ்ச்சிகள் அரண்மனையில் பற்பல சமயங்களிலும், இரவிலும் நிகழ்த்தப்பட்டுள்ளன என்று "தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்" என்ற நூலில், திரு. கே.எம். வேங்கடராமையா, அவர்கள் மோடி தமிழாக்கச் சுவடிக் குறிப்புகளிலிருந்து அறியமுடிகிறது.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் மட்டுமின்றி இளவரசன் கல்வி கற்கத் தொடங்கும்போதும் மற்றும் குடுமிக்கலியாணம் செய்யும் போதும் கோந்தளம் நிகழ்த்தப்பட்டது என்பதைப் பின்வரும் சரசுவதிமகால் மோடி தமிழாக்கச் சுவடியிலிருந்து தெரியவருகிறது. "ரா. சிவாஜிசாயேப் அவர்களுக்குக் குடுமிக் கலியாணமும் அக்ஷராரம்பம் கத்தியைக் கட்டுவதற்கும், நிஜவைசாக சுத்த துவாதசி சி. சௌ. அமணி ராஜே.சுலக்ஷணா பாயி, சௌ. ராஜம்மா பாயி, இவருடைய விவாகத்துக்குப் போடவேண்டிய பாக்கியிருக்கிற "கோந்தளம்" குலதர்மம் செய்வதற்கு விவாகத்தின் 4 கோந்தளங்களில் 2 கோந்தளங்கள் போடப்பட்டன" என்று தெரிவிக்கின்றது) இதில் குடுமிக்கலியாணம் என்பதை மராத்தியில் "பர்ஸா (Barsa என்று குறிப்பிடுவார்கள். அக்ஷராரம்பம் என்பது முதன்முதலில் கல்வி கற்கத் தொடங்கும் நிகழ்ச்சியாகும்.

பிறிதொரு மோடி தமிழாக்கச் சுவடியில்'' சி. சிவாஜி ராஜா சாயேப் அவர்கட்கு இடுப்பில் சின்ன கத்தியைக் கட்டுவதற்குக் கண்டேராவ் என்னும் சுவாமியின் முன்னிலையில் நடந்ததற்குச் செலவு'' என்று வரும் குறிப்பிலிருந்து இவை போன்ற மன்னர் குடும்ப விழாக்கள் மற்றும் சடங்குகளிலும் கோந்தளம் நிகழ்த்தப் பட்டுள்ளது என்பது தெரிகின்றது.

இவ்வகைக் கோந்தளம் பூத கோந்தளம், ரேணுகாதேவியின் கோந்தளம், சரசுவதியின் கோந்தளம் எனப் பல்வேறு பெயர் களாலும் அழைக்கப்பட்டு மராட்டிய மன்னர்கள் காலத்தில் வழக்கிலிருந்துள்ளது என்று அறியமுடிகிறது.

**துணை நூல்கள்**


1. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும்'' கே.எம். வேங்கடராமையா, எம்.ஏ.
2. Maratha Rule in the carnatic, C. K. Srinivasan.
3. Tamil Lexicon, Madurai University.

# 6 கொல்லிப்புறை காசு - ஓர் ஆய்வு

முனைவர் ஆ. பத்மாவதி
சிறப்பு நிலை கல்வெட்டாய்வாளர்

திருச்சி மாவட்டம் கரூரில் சங்ககாலச் சேர அரசரின் காசு ஒன்று அண்மையில் கிடைத்தது. அந்த காசை இரசாயன முறையில் சுத்தம் செய்து ஆய்வு செய்த போது ஒரு புறத்தில் பிராமி எழுத்துக்களுடன் கூடிய 'கொல்லிப் புறை' என்ற வாசகமும், மறுபுறத்தில் அழகிய அரச தோற்றத்துடன் கூடிய ஒரு மனித உருவம் தோரண வாயிலின் கீழ் நின்ற நிலை யிலும் காணப்படுகின்றன.

இந்தக் காசை வெளியிட்ட ஒரு சேர மன்னனின் சிறப்புப் பெயராகவே 'கொல்லிப்புறை' என்ற பெயர் இருத்தல் வேண்டும். அப்படி என்றால் இந்தக் காசை வெளியிட்ட அந்த சேர மன்னன் யார்? எத்தகைய சூழ்நிலையில் இத்தகைய காசை வெளி யிட்டான் என்பதை எல்லாம் இந்தக் கட்டுரை ஆய்வு செய்கிறது.

கொல்லிமலை ஓரிக்கே உரிமையுடையது. இதைப் பல சங்கப் பாடல்கள் குறிக்கின்றன.

குறுந்தொகை 100-வது பாடலில் 'வல்வில் ஓரி கொல்லிக் குடவரை' என்றும் புறநானூறு 158-இல் 'கொல்லியாண்ட வல்வில் லோரி' என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் பதிற்றுப்பத்து எட்டாம் பத்தில் பெருஞ்சேரலிரும்பொறை என்ற மன்னனைக் 'கொல்லிப்பொருந' என்றும் புறம் 22-இல் சேர மன்னன் மாந்தரஞ் சேரலிரும்பொறையை 'கொல்லியோர் அடுபொருந' என்றும் கொல்லிமலை சேரனுக்கே உரியது என்றும் கூறப்பட்டுள்ளது. எனவே உண்மையில் கொல்லிமலை முதலில் சொந்தமாக இருந்தது ஓரிக்கா? சேரனுக்கா? என்பதை அறிய வேண்டும். அகம் 209-இல் பாண்டியன் நெடுஞ்செழியனின் தலையாலங்கானத்து வெற்றியைப் பாடிய புலவர் கல்லாடனார்.

"................செவ்வேல்
முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க் ஈத்த
செல்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி

எனப் பாடியுள்ளார். அதாவது, முள்ளூர் மன்னனாகிய காரி என்பவன் ஓரியைக் கொன்று கொல்லிமலையைக் கைப்பற்றிச் சேரலர்க்குக் கொடுத்திருக்கிறான் என்பதால் கொல்லிமலை ஓரியிடமிருந்துதான் சேரனுக்கு வந்திருக்கிறது. இனி எந்தச் சேரனுக்குக் காரி கொடுத்தான் என்பது இங்கு முக்கியமானது.

தலையாலங்கானத்துப் போரில் பாண்டியனால் தோற்கடிக்கப் பட்டவர்களுள் ஒருவன் மாந்தரஞ்சேரலிரும்பொறை என்ற மன்னன். புறம் 22-இல் குறுங்கோழியூர் கிழார் என்பவர் 'மாந்தரஞ்சேரலிரும் பொறையை, 'கொல்லியோர் அடு பொருந' எனப் பாடுகின்றார். அப்படியென்றால் காரி மூலம் ஓரியைக்கொன்று கொல்லிமலையைப் பெற்றது இச்சேரன்தானா என்ற கேள்வி எழுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் வாழ்ந்த மற்றொரு சேரமன்னனைப் பற்றியும் நாம் ஆய்வு செய்ய வேண்டும். அவன் பெயர் நெடுஞ் சேரலாதன்.

அகநானூறு, 'வெண்ணி வாயில் என்ற இடத்தில் கரிகாலன் வேளிரொடு வேந்தர் சாயப்போரிட்டு வென்றான்' எனக் கூறுகிறது. (அகம் 246). கரிகாலனை எதிர்த்துத் தோற்ற அரசன் இந்த நெடுஞ்சேரலாதன். இவன் ஆரியரையும் யவனரையும் பிணித்து அரசாண்டவன். கடல் கடம்பு அறுத்தவன். இமயத்தில் வில் பொறித்தவன். இவனது முசிறித் துறைமுகத்திற்கு யவனரது கப்பல் பொன்னொடு வந்து கரியொடு பெயரும். அத்தகைய சிறப்பு வாய்ந்தவன். பதிற்றுப்பத்து நாலாம் பத்தில் குயட்டூர்க் கண்ணனாரால் பாடப்பட்டவன். இவன் தான் ''வேளிரொடு நட்பு கொண்டு அவர்களுடன் சோழன் கரிகாலனை எதிர்த்து இறந்தவன். ஆதலால் ''வேளிருள் ஒருவனாகிய காரி, இவனுக்காகத் தான் ஓரியுடன் போரிட்டு வென்று கொல்லிமலையை கைப் பற்றினானோ என்று எண்ணத் தோன்றும்.

இவனையும் கரிகாலனையும் பாடிய அதே மாமூலனார் பாண்டியனைத் தலையாலங்கானத்தில் எதிர்த்த திதியனையும் பாண்டியனின் தானைத் தலைவனாகிய மோகூர்ப் பழையனையும் பாடியுள்ளதால் ''கொல்லிப்புறையன்'' என்ற பெயர் இந்த நெடுஞ்சேரலாதனுக்கா? அல்லது முன்னர் கூறிய 'கொல்லிப் புரைய', 'கொல்லியோரடுபொருந? எனப் பாராட்டப்பெற்ற மாந்தரஞ்சேரலிரும்பொறைக்கா? என்பதே இங்கு ஆய்வுக்குரியது.

பதிற்றுப்பத்து மன்னர்களை ஆய்வு செய்தால் உதியன்மரபு என்றும் பொறையன் மரபு என்றும் இரு பிரிவுகளாக இருப்பதைக் காணலாம்.

உதியன் மரபில் நெடுஞ்சேரலாதனும் பொறையன் மரபில் மாந்தரஞ்சேரலிரும்பொறையும் உள்ளனர். இவன்தான் பொருநை யாற்றுப் பகுதியை அதாவது இன்றைய கரூர்ப் பகுதியை ஆண்டவன் எனச் சிலம்பு கூறுகிறது. இவன் வழியில் வந்தவன் பெருஞ்சேர லிரும்பொறை. சோழனால் கைப்பற்றப்பட்ட கருரை வென்று மீட்டவன் இவனே. இவனைப் பதிற்றுப்பற்று 8-ஆம் பத்தில்,

'விறன் மாந்தரன் விறல் மருக'

என மாந்தரஞ்சேரல் வழி வந்தவன் என்றும்,

'கொல்லிப் பொருந'

என்றும் பாராட்டப்படுகிறான். இவனது மகன் இளஞ்சேரலிரும் பொறையை 9-ஆம் பத்து 'கொங்கர் கோவே' எனப் பல இடங் களில் பாராட்டுகிறது. கருரும் கொல்லி மலையும் அமைந்திருப்பது கொங்குநாடு என்பதும் அதை ஆண்டதால் கொங்கர் கோவே என்று பாராட்டப்பட்டான் என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இந்தப் பொறையன் வழியினர் மூவரில் பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் வாழ்ந்தவனும் மூத்த தலை முறை யினனுமாகிய மாந்தரஞ்சேரலிரும்பொறைக்காகவே இவனை தானைத் தலைவனாக்க காரி பொறுப்பேற்று ஓரியைக்கொன்று கொல்லியை வென்றிருத்தல் வேண்டும்.

மாந்தரஞ்சேரல் பாண்டியனுடன் போரிட்ட போது வேளிர்கள் இவனுடன் சென்று போரிட்டனர். எனவே வேளிர்களுள் ஒருவ

னாகிய காரி இவனது தானைத் தலைவனாக விளங்கியிருக்க பெரும் வாய்ப்பிருக்கிறது.

மாந்தரஞ்சேரல், பொறையர் வழி வந்தவன் ஆதலாலும் அவனும் அவன் வழியினரும் கரூர்ப் பகுதியையும், கொல்லி மலைப் பகுதியையும் கொண்ட கொங்குநாட்டை ஆண்டார்கள் என்பதாலும் மாந்தரஞ்சேரலிரும்பொறையே இக்காசை வெளியிட்டிருத்தல் வேண்டும். மேலும் இக்காசு கரூரில் கிடைத்தது என்பதும் கரூரில் உள்ள சங்க காலச் சேரர்களின் கல்வெட்டுக்களும் சேர அரசர்களைப் பொறையன் என்று கூறுவது மேற்கூறிய ஆய்விற்கு மேலும் உறுதி அளிப்பதாக உள்ளது. ஆனால் நெடுஞ்சேரலாதனோ கரூரை அல்ல முசிறியை ஆண்டவன். சேரலாதனின் முசிறித்துறைமுகத்தை நெடுஞ்செழியன் முற்றுகையிட்டதை அகப்பாடல் (149) கூறுகிறது. எனவே 'கொல்லிப்புறை' என்ற காசை வெளியிட்டவன் மாந்தரஞ்சேரல் இரும்பொறையே எனலாம்.

ஒவ்வொரு வெற்றியின் போதும் மன்னர்கள் தானங்களும், வேள்விகளும், துலாபாரம் போன்றவைகளும் செய்வது வழக்கம். அதுபோல வெற்றிகளுக்குப் பின் அதன் அடையாளமாகக் காசுகளை வெளியிடுவதும் வழக்கம். ஆதலால் இக்காசை ஓரியுடன் போரிட்டு கொல்லிமலையைக் கைப்பற்றிய வெற்றியின் சின்னமாகவே, இக்காசை வெளியிட்டிருக்கலாம். கொல்லி மலை இனி ஓரிக்கு அன்று பொறையனுடையதே என்பதைப் பறை சாற்றும் பொருட்டு, மாந்தரஞ்சேரலிரும்பொறையால் 'கொல்லிப்புறை' என்ற சிறப்புப் பெயர் பெற்று வெளியிட்ட காசாகவே இந்தக் காசு இருக்கலாம் என்று கூற வாய்ப்பிருக்கிறது.

பாண்டியன் நெடுஞ்செழியன், சோழன் கரிகாலன், சேரன் மாந்தரஞ்சேரலிரும்பொறை, நெடுஞ்சேரலாதன் ஆகியோர் காலம் கி.மு 4-ஆம் நூற்றாண்டு என தொல்லியல் அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. வடநாட்டில் மகதநாட்டை ஆண்ட பிந்துசாரன் முதல் மௌரியப் பேரரசர்களின் காலம் வரை அநேகமாக அவ்வப்போது பக்கத்து சிறு சிறு அரசுகளையும் தங்கள் நாட்டுடன் சேர்த்தே ஆண்டனர். அவர்களில் ஒரு அரசு 'யுத்தேயாஸ்' எனக் கூறப்படுகிற அரசு. இவ்வழியினர் வெளியிட்ட காசுகள் ஏராளமாகக் கிடைத்திருப்பதால் இவர்கள் அவ்வப்போது சுயேட்சை

யாகவும் ஆட்சி செய்துள்ளனர் எனத் தெரிகிறது. இந்தக் காசு களின் மறுபுறத்தில் அலங்கார தோரண வாயிலில் அரசத் தோரணையுடன் கூடிய உருவம் நின்ற நிலையில் உள்ளதைக் காணலாம். இந்த உருவமும், கொல்லிப்புறை காசின் மறு பக்கத்தில் உள்ள உருவமும் மிகவும் ஒற்றுமை உடையதாகத் தெரிகிறது. இந்த ஒற்றுமையும் கொல்லிப்புறை காசு கி.மு. நான்காம் நூற்றாண்டு என்பதை உறுதிச் செய்கிறது என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும். ★

## அரிய தந்தச் சீப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அண்மையில் சென்னை ஆழ்வார்பேட்டையில் இரதி மன்மதன் உருவங்களைக் கீரி வரைந்த கோட்டு ஓவியத்துடன் கூடிய தந்தச் சீப்பு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. மன்மதன் கிளி மீதமர்ந்தும் இரதி அன்னத் தின் மீது அமர்ந்தும் வில்லேந்தி கணை எய்யும் நிலையில் மிக அழகாக வரையப்பட்டுள்ளன. மன்மதன் தலையில் முடிசூடி ஆடை அணிகலன்களுடன் முறுக்கிய மீசையுடன் ஆண்மை தோன்ற அமர்ந்துள்ளான். இரதியும் மணிமுடி அணிந்து அரசி போல் வடிவாகக் காணப்படுகிறாள்.

இரதி மன்மதன் தமிழர்களின் இன்ப வாழ்வில் நீங்கா இடம் பெற்றுள்ளதால் தமிழ் இலக்கியங்கள், கற்சிலைகள், சுவர் ஓவியங்கள் என்று எங்கும் நீக்கமற நிறைந்துள்ளதைக் காண் கிறோம். தந்தச் சீப்பில் காண்பது இதுவே முதல் முறை.

இச்சீப்பு நாள்தோறும் பயன்படுத்துவதற்கேற்ப ஒரு முனையில் சிக்கெடுக்கப் பெரிய பல் வரிசையையும், மறுமுனையில் சீவி முடிக்க சிறு பல் வரிசையும் அமைத்துள்ளனர். நெடிய பயன்பாட்டில் இருந்ததற்கு அடையாளமாக சில பற்கள் முறிந்துள்ளன.

இச்சீப்பு 18 × 13செ.மீ. அளவுடையது. இது கி.பி.1850-இல் செய்யப்பட்டிருக்கலாம். சென்னையைச் சேர்ந்த திருமதி. வில்லி விஜயராகவன் அவர்களது கலைப்பொருள் தொகுப்பில் இருந்த இந்தச் சீப்பை சென்னை பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி கண்டறிந்துள்ளார்.

# 7 பிரம்ம தேசம்

**மா. சந்திரமூர்த்தி**
சிறப்புநிலைப் பதிவு அலுவலர்,
சென்னை

## அமைவு

பிரம்மதேசம் என்னும் ஊர் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டத்தில், விழுப்புரத்திலிருந்து 25 கி.மீ. தொலைவிலும், செஞ்சியிலிருந்து 23 கி.மீ. தொலைவிலும் உள்ளது. எண்ணாயிரம், எசாலம், தாதாபுரம் ஆகிய வரலாற்றுப் புகழ்மிகு ஊர்கள் இவ்வூரைச் சுற்றியுள்ளன.

## ஊரும் பேரும்

பிராமணர்கட்குத் தானமாக வழங்கப்படும் ஊர் பிரம்மதேயம் எனப்பட்டது. பிரம்மதேசம் என்ற பெயரில் தமிழகத்தில் பல ஊர்கள் உள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் திருவாலீஸ்வரம் அருகிலும், விழுப்புரம் மாவட்டத்தில் பெருமுக்கலுக்கு அருகிலும், வேலூர் மாவட்டம் செய்யாறு வட்டத்திலும் பிரம்மதேசம் என்ற பெயரில் ஊர்கள் உள்ளன. இவ்வூர் சோழர் காலத்திய வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர்களுள் ஒன்று. எண்ணாயிரம் கல்விச்சாலை இவ்வூருக்கு மிக அண்மையில் உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க முதலாம் இராஜேந்திர சோழனுடைய செப்பேடு, மற்றும் செப்புத்திருமேனிகள் பல கிடைக்கப்பெற்ற எசாலம் என்ற ஊர் இதனை அடுத்துள்ளது. தனியூர் இராஜராஜச் சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்டது.

## பாதாளீஸ்வரர் கோயில்

இவ்வூரில் பாதாளீஸ்வரர், பிரமேஸ்வரர் எனும் இரண்டு சிவாலயங்கள் அருகருகே அமைந்துள்ளன. இவற்றுள் சாலையோரம் அமைந்துள்ள பாதாளீஸ்வரர் கோயில் பழமையும், பெருமையும் மிக்கது. தாதாபுரத்துக் குந்தவை ஆழ்வார் விண்ணகரம், இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் ஆகிய கோயில்கள் எழுப்பப்பட்ட காலத்திலேயே இக்கோயிலும் எழுப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

இக்கோயிலின் அமைப்பும் தோற்றமும், அங்கங்களும், கட்டடக் கலைப்பாணியும், தாதாபுரம் சிவன் கோயிலை ஒத்து அமைந்துள்ளது நோக்கத்தக்கது. முந்தைய சோழர் காலத்தைச் சார்ந்த பாதாளீஸ்வரர் கோயில் கால வெள்ளத்தாலும், இயற்கையின் சீற்றத்தாலும் சிதைந்த நிலையிலும், அதன் பழமையையும் கலைச் சிறப்பையும் பறைசாற்றிக் கொண்டுள்ளது.

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், பரிவார ஆலயங்களை உள்ளடக்கித் திருச்சுற்று மதில் சூழ இருந்துள்ளது. தற்போது மதிற்சுவர் முற்றிலும் சிதைந்துவிடவே பரிவார ஆலயங்கள் சிதைந்தும், சிலைகளின்றியும் காணப்படுகின்றன. தேவகோட்ட மாடங்களுக்குரிய சிற்பங்களும் தற்போது காணக்கிடைக்கவில்லை. இக்கோயில் தற்போது வழிபாட்டிலில்லை.

## இராஜராஜேஸ்வரம்

பாதாளீஸ்வரர் கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. தற்போதுள்ள கல்வெட்டுகளில் முதலாம் இராஜேந்திரன் கல்வெட்டே பழமையானதாக உள்ளது. எனினும் கட்டடக்கலை அமைப்பினை நோக்க இக்கோயில் முதலாம் இராஜராஜன் காலத்ததாக எண்ணத் தோன்றுகிறது. பராந்தகன் சுத்தமல்லியா ராகிய முக்கோக்கிக்கிழானடிகள், இராஜேந்திர சோழனின் பலம் பெருக (புஜம் வர்த்திக்கப்) பாதாளீஸ்வரர் கோயிலுக்கு நிலம் தானமாக அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. தானமளித்தபோது இராஜேந்திரசோழன் இராஜராஜேஸ்வரமுடையார் கோயிலில் இருந்துள்ளதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கல்வெட்டு குறிப்பிடும் இராஜராஜேஸ்வரம் இப்பாதாளீஸ்வரமுடையார் கோயிலாக இருக்கலாம்.

## பிரம்மபுரீஸ்வரர் கோயில்

இவ்வூரிலுள்ள மற்றொரு கோயில் பிரம்மபுரீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகிறது. ஊருக்கு வடமேற்கே கீழ்த்திசை நோக்கி அமைந்துள்ள இக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், திருச்சுற்று மாளிகை, பரிவார ஆலயங்கள், கோபுரம் - ஆகிய பகுதிகள் அமைந்துள்ளன.

கோயிற் கருவறை சதுரவடிவுடையது. கருவறையின் நடுவே உள்ள இலிங்கத்தைச் சுற்றி வட்டவடிவுடைய ஆவுடையாரைக் காணலாம். வழிபாட்டிலுள்ள, இலிங்க வடிவம் - பிரம்மபுரீஸ்வரர் என்ற பெயரில் அழைக்கப் பெறுகிறது. இத்தலத்து இறைவி பெரிய நாயகி அம்மன் சன்னதியை முகமண்டபத்தின் வடதிசையில் தெற்கு நோக்கியவாறு காணலாம்.

## கருவறை புறச்சுவர்

கருவறை புறச்சுவர் முறையாக அங்கங்களைப் பெற்று விளங்குகிறது. இதன் அதிட்டானவரி ஜகதிப்படை வரை மண்ணில் புதைந்துள்ளது. உபானம், பத்மம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கண்டம், பட்டிகை, கண்டம், வேதிகை ஆகிய பகுதிகளுடன் அதிட்டானம் விளங்குகிறது.

## தேவகோரட்டச் சிற்பங்கள்

அதிட்டானத்தின் மேலுள்ள கருவறையின் புறச்சுவர்ப் பகுதிகளில் தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திசைகளில் முறையே தேவகோட்ட மாடங்களைக் காணலாம். தென்திசைக் கோட்டத்தில், இரு சனகாதி முனிவர்களுடன் ஆலின் கீழ் வீராசனத்தில் அமர்ந்து அறம் போதிக்கும் தட்சிணாமூர்த்தியின் சிற்ப வடிவம் காணப்பெறுகிறது. மேற்குதிசைக் கோட்டத்தில் அடி முடி காணா அண்ணலான இலிங்கோத்பவரின் சிற்பவடிவத்தைக் காண்கிறோம்.

இலிங்கத்தின் இடது மேற்பகுதியில் நான்முகனின் வாகனமான அழகிய அன்னம் காட்டப் பெற்றுள்ளது. இலிங்கத்தின் அடிப் பாகத்தில் மானிட வடிவில் வராகத்தின் சிற்ப வடிவம் அமைந்து, இதன் மேற்கரங்கள் இரண்டும் ஆழியையும், சங்கத்தையும் கொண்டு விளங்க, கீழ்க்கரங்கள் இரண்டும் அடியை அகழ்ந்து தேடும் நிலையில் காட்டப் பெற்றுள்ளன. வடதிசை மாடத்தில் நான்கு கரங்களுடன் நான்முகனின் நின்ற கோலச் சிற்பத்தினைக் காணலாம். இதன் மேற்கரங்கள் இரண்டும் உருத்திராக்க மாலையையும் கெண்டியையும் கொண்டிருக்க, கீழ்க்கரங்கள் அபய வரமளித்து அருள்பாலிக்கின்றன.

## சோழர் காலத் தூண்கள்

தேவகோட்ட மாடங்களின் இருமருங்கிலும் எளிய சோழர்கால அரைத்தூண்கள் அலங்கரிக்கின்றன. பக்கத்திற்கு எட்டு தூண்கள் வீதம் மூன்று திசைகளிலும் 24 தூண்கள் அணி செய்கின்றன. இத்தூண் ஒவ்வொன்றிலும் கால், இடைக்கட்டு, கலசம், தாடி, குடம், பத்மம், பலகை, வீரகண்டம, போதிகை ஆகிய உறுப்புக் களைப் பெற்று எளிய உத்திரத்தோடு சென்று இணைகின்றன. உத்திரத்தின் மேலுள்ள பிரஸ்தரம் என்னும் தோள்பகுதி பூதகணவரி, கபோதம், யாளிவரி ஆகிய உறுப்புக்களைப் பெற்று விளங்குகிறது.

## பூதகணங்கள்

பூதவரியில் பூதகணங்கள் களிபேருவகையோடு ஆடிப்பாடி இசைத்துக் களிக்கும் காட்சி காணத்தக்கது. சங்கூதும் பூதகணம் மத்தளம் கொட்டும் பூதகணம், வீணை இசைத்துக் கைத்தாளம் கொட்டிக் களிக்கும் பூதகணமெனப் பல்வேறு நிலைகளில் பூத கணங்களைக் காணலாம்.

கழைக்கூத்தாடும் மூன்று பூத கணங்களுக்கு ஒரே காலையேக் காட்டியிருக்கும் சிற்பியின் திறத்தை வியக்காமல் இருக்க முடியாது

## பஞ்சதந்திரக் கதைச் சிற்பங்கள்

மேலும் இவ்வரிசையில் இரு கொக்குகள் ஆமையைப் பற்றி ஆகாயத்திற்குக் கொண்டு செல்லும் இலக்கிய நயமிக்கக் காட்சி களும் காணத்தக்கன. இவை, பஞ்சதந்திரக்கதையைத் தழுவிய சிற்பங்களோடு ஒப்பிடத்தக்கன. எனவே பஞ்சதந்திரக்கதை தழுவிய சிற்பங்களையும் கோயில் பூதவரியில் அமைக்கும் சோழர்காலப் பண்டைய வழக்கினை உணரமுடிகிறது.

## சிவபுராணச் சிற்பங்கள்

மேலும், இதன் இடைஇடையே காணப்படும் கண்டப்படை யில் இலிங்கத்தை வழிபடும் நாகம், இலிங்கத்திற்குப் பால் சொரியும் பசு, இலிங்கத்தை வழிபடும் அடியார், இலிங்கத்தை வழிபடும் மீன், முதலைமேல் சவாரி செய்யும் குரங்கு, சிவனின்

வாகனமான நந்தி, குரங்கும் குழந்தையும் ஆகிய சிறுசிறு சிற்பங்களும், சிவபுராணம்-பஞ்சதந்திர கதைகளைத் தழுவி அமைக்கப் பெற்றுள்ளன.

பூதவரி மேலுள்ள கபோதகம் அடங்கியும், அழகாகவும் அமைந்து காணப்பெறுகிறது. இதன் இடையிடையே நாசிக் கூடுகளைக் காண்கிறோம். இதன் மேலுள்ள யாளிவரி வரிசையாக முகத்தைப் பின்புறம் திருப்பிய நிலையில் காட்டப் பெற்றுள்ளது.

## சிகரமும் கிரீவமும்

இக்கோயில் விமான சிகரமும் முழுதும் செங்கல்லும் சுதையும் கொண்டு எழுப்பப் பெற்றுள்ளது. இதன் கிரீவம் வட்ட வடிவுடையது. கிரீவத்தின் நான்கு திசைகளிலும் வேலைப்பாடுமிக்க சுதையாலான கிரீவக் கோட்டங்களைக் காணலாம். வேதிப்படையில் நான்கு நந்திகள் நான்கு திசைகளை நோக்கிய வண்ணம் காட்டப் பெற்றுள்ளன. கிரீவத்தின் மேலுள்ள சிகரமும் வட்டவடிவுடைய வேசர வகையைச் சார்ந்தது. சிகரத்தின் மேலுள்ள மகாபத்மத்தில் தற்போது ஸ்தூபியில்லை. இவ்விதம் அதிட்டானம் முதல் பிரஸ்தரம் வரை இக்கோயில் கற்றளியாகவும், அதன் மேலுள்ள சிகரப்பகுதி செங்கல் தளியாகவும் அமைந்துள்ளது.

## விநாயகரும் விஷ்ணு துர்க்கையும்

கருவறை முன்னுள்ள அர்த்தமண்டபம் நீள் சதுர வடிவில் கீழ் மேலாக நீண்டுள்ளது. இதன் புறச்சுவர்ப் பகுதி கருவறையை ஒத்த அமைப்புடையது. இதன் தெற்கிலும், வடக்கிலுமாக அமைந்துள்ள மாடங்களில் முறையே விநாயகரைம், விஷ்ணு துர்க்கையையும் காண்கிறோம். நின்ற கோலத்திலுள்ள விநாயகர் நான்கு கரங்களுடன் வலம்புரி விநாயகராகக் காட்சியளிக்கிறார். முகமும், துதிக்கையும் சிதைந்த நிலையிலும், எழில்மிக்கதாக இவ்வுருவம் திகழ்கிறது. வடதிசையிலுள்ள துர்க்கை மேற்கரங்களில் பிரயோகச் சக்கரத்தினையும், சங்கினையும் பற்றியுள்ளாள். அவளது கீழ் வலக்கை அபய முத்திரையில் அமைந்து அருள்பாலிக்க இடக்கை தொடை மீது அமைந்துள்ளது. கால்களின் கீழ் எருமைத்தலை இங்கில்லை. தாமரை இருக்கையின் மீது திரிபங்கியாகத் துர்க்கையின் நின்ற கோலக்காட்சி வடிவமைக்கப் பெற்றுள்ளது.

அர்த்தமண்டபத்தின் முன்புறமுள்ள மகாமண்டபம் சதுர வடிவில் பரந்து காணப் பெறுகிறது. மகாமண்டபத்தை உருளை வடிவான எட்டு தூண்கள் அலங்கரிக்கின்றன. அதன் மேலுள்ள இரு தலைப் போதிகை சோழர்காலக் கலைப்பாணியில் அமைந்துள்ளது.

## மகாமண்டபம்

மகாமண்டபத்தின் முன்புறம் விசாலமான முக மண்டபத்தைக் காணலாம். இம்மண்டபத்தை நான்கு வரிசைகளில் பன்னிரண்டு தூண்கள் தாங்கி நிற்கின்றன. உருளை வடிவான இத்தூண்கள் மகா மண்டபத் தூண்களைவிட உயரமானவை. இம்மண்டபத்தின் கீழ்த் திசையில் இச்சிவாலயத்திற்குரிய நந்தி கருவறையை நோக்கி அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் மேற்திசையில் சுவரை யொட்டி இடம்புரி விநாயகர், இலிங்க வடிவம், நின்ற கோல விநாயகர் வடிவம், வள்ளி, தெய்வானை ஆகிய இரு தேவியர் சூழ வச்சிரப் படையும், சக்திப்படையும் ஏந்தி அருள்பாலிக்கும் முருகன், பைரவர் ஆகிய சிற்ப வடிவங்களைக் காணலாம். இவற்றில் பல இக்கோயிலின் பரிவார ஆலயங்களுக்கு உரியவை. தவிர வட திசைச் சுவரின் மாடத்தில் சண்டிகேசுவரர் சிற்ப வடிவமும், இதன் முன்புறம் நவக்கிரக மேடையும் அமைந்துள்ளன.

## பெரிய நாயகி

முகமண்டபத்தின் வடதிசையில் அம்மன் பெரியநாயகியின் தனிச் சன்னதியைக் காணலாம். இது தாமரைப் பீடத்தின் மீது நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. இதன் மேல் வலக்கை அல்லி மலரையும், இடக்கை தாமரை மலரையும் பற்றி நிற்கின்றன. கீழ்க்கைகள் இரண்டும், அபய வரத முத்திரை யிட்டு அருள்பாலிக்கின்றன. அருள்சுரக்கும் முகப்பொலிவும், அழகிய உடற்கட்டும் ஆடையும் அணிகலன்களும் ஒருங்கே பெற்றுத் திகழும் இத்தேவி இவ்வாலயத்திலுள்ள தொன்மை வாய்ந்த தேவி யின் வடிவமாகும். இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இடைச் சோழர்கால வனப்பு மிக்கச் சிற்பமாகும்.

## திருச்சுற்று மாளிகை

இக்கோயில் முகமண்டபத்தைச் சுற்றிலும் வலம் வர அழகிய விசாலமான திருச்சுற்று மாளிகை அமைந்துள்ளது. 113 உருளை வடிவான சோழர்காலத் தூண்கள் இம்மாளிகையை சுற்றிலும் அலங்கரிக்கின்றன.

### கல்விச் சாலையின் பிரிவு

திருச்சுற்று மாளிகையின் அமைப்பும் பகுப்பும் பல மாணவர்கள் அமர்ந்து கற்கும் வகையில் விசாலமாக அமைந்துள்ளது. எண்ணாயிரம் கோயில் திருச்சுற்று மாளிகையை நோக்க பிரம்மதேசம் கோயில் திருச்சுற்று மாளிகை அளவில் பெரியது. திருச்சுற்றாலைக் கல்லூரி அமையும் வகையில் விசாலமாக அமைந்துள்ளது. மேலும் பிரம்மதேசம் எண்ணாயிரத்திற்கு மிக அருகாமையில் அமைந்துள்ள ஊராதலால் இக்கோயிலில் இருக்கும் திருச்சுற்றுமாளிகை எண்ணாயிரம் கல்விச் சாலையின் விரிவாக இருந்திருக்குமோ என்ற ஐயம் எழுகிறது.

திருச்சுற்று மாளிகைச் சுவரையொட்டி, கீழ்த்திசையில் அமைந்திருந்த உட்கோபுரம் தற்போது வாயிலை மட்டும் நல்ல நிலையில் பெற்றுள்ளது. ஏனைய மேற்பகுதி காலவெள்ளத்தில் சிதைந்து உள்ளது. கோபுரத்தைச் சுற்றி வலம் வரும் திருமதிலும் உடைந்துள்ளன.

### பல்லவர் காலத்து துர்க்கை

இவ்வூரில் உள்ள பிரம்மபுரீஸ்வரர் கோயிலின் சீரமைப்புப் பணிகளை தொல்லிய்ய துறையின் சென்னை சரகத்தினர் மேற்கொண்ட போது மண்ணுக்குள் புதைந்திருந்த துர்க்கை சிற்பத்தை அண்மையில் கண்டுபிடித்துள்ளனர். எட்டு கரங்களுடைய இச்சிற்பம் எருமைத் தலைமீது நேராக நிற்கிறது. கரங்களில் ஆழியும் சங்கமும் வாளும் கேடயமும் சிலையும் கணையும் ஏந்தி நிற்கும் இவ்வுருவம் பல்லவர் காலத்தியதாகக் கருதப்படுகிறது. எனவே பிரம்மதேசம் பல்லவர் காலந்தொட்டு கோயிலோடு தொடர்புடைய ஊராக புகழோடு விளங்கியுள்ளது.

# கோனேரிராஜபுரம் அருள்மிகு உமாமகேசுவரர் திருக்கோயில்

8

அ. அப்துல்மஜீத், எம்.ஏ.,
இயக்குநர் (பொ.), தொல்லியல்துறை

## இருவர் பதிகம் பெற்ற தலம்

நால்வர் என்று போற்றிப் புகழப்படும் சைவ சமயக் குரவர்களுள் சமகாலத்தவரான அப்பரும் சம்பந்தரும் இணைந்து பாடிய திருக்கோயில்கள் சில. இப்பெருமக்கள் தனித்தனியே கண்டு பாடிய பதிகள் பல. இருவரில் ஒருவர் பதிகம் மட்டுமே பெற்ற கோயில்கள் உண்டு. கோனேரிராஜபுரத்திலுள்ள உமாமகேசுவரர் திருக்கோயில் இரண்டாம் வகையைச் சேர்ந்தது. இத்தலத்து இறைவனை அப்பர் ஒரு பதிகத்திலும் சம்பந்தர் ஒரு பதிகத்திலும் பாடிப் பரவியுள்ளனர்.

'அங்கோல் வளைமங்கை காண, அனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக,
வெங்காடு இடமாக வெந்தீ விளையாடும்
நம் கோன் நமையாள்வான், நல்லம் நகரானே,

என்பது சம்பந்தரின் அருள்வாக்கு. நாவுக்கரசர் பெருமான்,

'தமக்கு நல்லது தம் உயிர் போயினால்
இமைக்கும் போது இராது இக்குரம்பைதான்
உமைக்கு நல்லவன் தான் உறையும் பதி
நமக்கு நல்லது நல்லம் அடைவதே,

என்று இறைவனைப் போற்றி மனங்கசிந்து பாடுகிறார்.

## கோனேரிராஜபுரம்

அப்பரடிகளால் 'உமைக்கு நல்லவன்' என்று செல்லமாக அழைக்கப்படும் இறைவன் வாழும் இக்கோனேரிராஜபுரம், தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணத்திலிருந்து காரைக்கால் செல்லும் வழியில், பதினெட்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள புதூரிலிருந்து, கிழக்குப்புறமாகச் செல்லும் மண்பாதையில் ஆறு கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

## உமாமகேசுவரர் கோயில்

அழகிய பெரிய திருக்குளத்துடன் கூடிய இக்கோயில் இப்போது உமாமகேசுவரர் திருக்கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயிலின் கோபுரமற்ற நுழைவாயிலைக் கடந்ததும் நீண்ட மண்டபமொன்று நம்மை வரவேற்கிறது. இம்மண்டபத்தின் கூரையில் இக்கோயிலின் தலவரலாறு ஓவியங்களாய்த் தீட்டப் பெற்றுள்ளன. இவ்வசந்த மண்டபத்தை அடுத்துள்ள மூன்று நிலை உட்கோபுரவாயில் வழியே நுழைந்ததும், அழகிய முன் மண்டபம் எதிர்கொள்கிறது. இம்மண்டபத்தின் வலப்புறத்தில் ஒன்பான் கோள்களுக்கான மேடை காணப்படுகிறது. இடப் புறத்தில் கிழக்குப் பார்த்த நிலையில் முருகன் தன் தேவியருடன் எழுந்தருளியுள்ளார். இடது கோடியில் உள்ள அறைகளில் தான் தமிழகத்தின் புகழ் வாய்ந்த செப்புத்திருமேனிகள் காணப் படுகின்றன. இவற்றை உருவாக்கிய செம்பியன் மாதேவியாரின் இறைப்பற்றும் சமயத் திருப்பணிகளும் தமிழகத்துக் கலை வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கவையாகும்.

அறையின் இடப்புறத்துக் கோடியில் முப்புரம் எரித்த இறைவன் மிகப்பெரும் வடிவினராய்த் தன் தேவியுடன் எழுந் தருளியுள்ளான். நடுவில் உள்ள மேடையில் காளையூர்தியுடன் இறைவனும் இறைவியும் அழகே வடிவாய் நின்ற கோலத்திலும், இடப்புற மேடையில் ஆடல்வல்லானும் சிவகாமி அன்னையும் காட்சி தருகின்றனர்.

## ஆடவல்லானின் நெடிய திருமேனி

தனியறை ஒன்றில் ஆடல் வல்லானின் நெடிய திருமேனி வீசிய கரத்துடன் வார்ப்புக்கலையின் வடிவழகுச் சாதனையாய் நிறுவப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே மிகப்பெரிய நடராஜ வடிவமென்று போற்றி வணங்கப்படும் இத்திருமேனியின் அருகே சிவகாமி அன்னையின் எழிற்கோல வடிவமும் காணப் படுகிறது. வலது முன்கரம் அபய முத்திரையிலும் இடது முன்கரம் வேழ முத்திரையிலும் அமைந்துள்ள நடராஜரின் பின் கரங்களில், வலப்புறம் துடியும், இடப்புறம் தீயகலும் காணப்படுகின்றன. வலதுகாலை ஊன்றி, இடது காலைத் தூக்கி இறைவன் ஆனந்தத் தாண்டவராய்க் காட்சி தருகிறார். விரிசடை அழகனாய்க் கொக்கிறகும், ஊமத்தம் பூவும் செருகிய முடியுடன் ஆடைகள் பறக்க, அகிலமே தன்னிலை மறக்க, இறைவன் ஆடும் இந்த எழிற்கோலத்தில் தன்னையிழக்காதார் யார்? இத்திருமேனியின் வார்ப்புத்திறன் நம்மை வியப்புக் குள்ளாக்குகிறது. உடலமைப்பு நுணுக்கங்களும் ஆடல் தோற்றத் திற்கேற்ப வடிக்கப்பட்டுள்ள வளைவுகளும், நெளிவுகளும் சோழ நாட்டுக் கலைஞனின் திறமைக்கு எடுத்துக்காட்டு.

கண்டோர் கண்வழி புகுந்து, இதயத்தைக் களிப்பில் ஆழ்த்த வல்லவை இச்செப்புத்திருமேனிகள்.

## புகழாபரண மண்டபம்

இக்கோயிலின் முன் மண்டபத்தை அடுத்து மகா மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் மூன்றாம் குலோத்துங்க சோழன் புகழாபரண மண்டபம் என்று அழைக்கப்பட்டதாக அம்மன்னனின் பதினாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று தெரிவிக்கிறது.

உள்மண்டபத்துக்கும் கருவறைக்கும் இடையில் இடைக்கட்டு அமைந்துள்ளது. இந்த இடைக்கட்டின் வாயிலை வாயிற்காப்போர் சிற்பங்கள் அணி செய்கின்றன. புடைத்த விழிகளும், செவிகளில் ஆந்தைக் குண்டலங்களுமாய், இடக்கரம் வியப்பு முத்திரை காட்ட வலக்கரம் கதையின் மீதிருக்க, இச்சிற்பங்களின் அழகே அழகுதான்.

நான்கு தூண்களுடன் கூடிய இடைக்கட்டை அடுத்துக் கருவறை அமைந்துள்ளது. இறைவன் இலிங்க வடிவில் எழுந்தருளியுள்ள இத்திருமுன், மேற்கு நோக்கி அமைந்துள்ளது.

### அங்கவளநாயகி

இத்தலத்து இறைவியின் பெயர் அங்கவளநாயகி, அழகிய உடலமைப்பு கொண்ட அம்மை என்பதே இதன் பொருள். இவ்வழகிய நாயகியின் திருக்கோயில் மையக் கோயிலின் வட புறத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. உள்மண்டபம் கருவறை இவற்றின் புறச்சுவர்களில் காணப்படும் சிற்பங்களின் கலைப்பொலிவும் செதுக்குத் திறனும், நம் கண்களை வியப்பில் மலர்த்தி நெஞ்சைக் களிப்பில் ஆழ்த்துகின்றன.

### சோழர்காலக் கல்வெட்டுகள்

இக்கோயிலில் படியெடுக்கப்பட்ட நாற்பத்திரண்டு கல்வெட்டுகளுமே சோழர் காலத்தவை. உத்தம சோழன் காலம் தொடங்கி மூன்றாம் இராஜராஜன் காலம் வரையில் அரியணை ஏறிய சோழ வேந்தர்கள் பெரும்பான்மையோரது கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. இவற்றில் அதிக அளவில் பொறிக்கப்பட்டுள்ளவை முதலாம் இராஜேந்திரன் காலத்தனவாகும். ஏழு கல்வெட்டுகள் முதற்குலோத்துங்கன் காலத்தவை. இக் கல்வெட்டுகள் அக்கால அரசியல் நிலை, வழிபாட்டு முறை, கோயிலாட்சி, ஊர்ப்பெயர்கள், சமயச் செய்திகள் முதலானவற்றைத் தெளிவு படவும், சுவைபடவும் எடுத்துக் கூறுகின்றன.

### பழஞ்சிறப்பு

ஒரு காலத்தில் வளமாகவும் செழிப்பாகவும், மன்னர் முதல் மக்கள் வரை அனைவரும் விரும்பி வழிபட்ட ஆலயமாகவும் இருந்தது இக்கோயில். 'உமைக்கு நல்லவன்' என்று அப்பரடிகள் நினைந்து போற்றிய இறைவன் வாழும் இத்தலம், இன்றும் நல்ல நிலையில் போற்றிப் பாதுகாக்கப்பட்டுவருவது பாராட்டுக்குரியது. சோழப் பேரரசர்களின் செல்லப்பிள்ளையாய் விளங்கிப் பல வரலாற்றுப் புகழ் வாய்ந்த கல்வெட்டுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இவ்வழகிய திருக்கோயிலின் பழஞ்சிறப்புக்களைப் பாரறியச் செய்வது நம் கடமையாகும்.

# அரங்குளநாதர் கோயில் சூலக்கல்

திருவரங்குளம், அரங்குளநாதர் கோயிற் திருச்சுற்றின் இரண்டாம் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் நீள் செவ்வக வடிவில் சூலக்கல் ஒன்று நடப்பட்டுள்ளது. மூன்று பக்கங்களில் திரிசூலம் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் வடபுறமுள்ள சூலம் சிறியதாகக் காட்டப்பட்டு முன்னே உயர்ந்த பனைமரம் ஒன்று குலைதள்ளிய நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. சூலத்தின் மேற்குத் திசையில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று காணப் படுகின்றது. இக்கல்வெட்டு சென்னை பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தியால் நேரில் படியெடுக்கப்பட்டது.

## கல்வெட்டு வாசகம்

அர
னங்
குள
னாதர்
கிறாமம்
னாங்கூர்

நாங்கூர் என்னும் கிராமம் அரங்குளநாதர் கோயிலுக்குரிய கிராமம் என்பதை இச்சூலக் கல் உணர்த்துகிறது. இவ்வூர்ச் சிவாலயத்திற்கு அளிக்கப்பட்ட நில எல்லையைக் குறிக்கும் கல்லாக இதைக் கூறலாம். இக்கல்வெட்டின் எழுத்தமைதி கொண்டு இதனை கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகக் கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநருக்காக திரு மா. சந்திரமூர்த்தி
பதிவு அலுவலரால் வெளியிடப்பெற்றது.